# பண்டுவஸ்நுவர பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பண்டுவஸ்நுவர பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் இருப்பு மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருப்புக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் ஆரம்ப இருப்பாக 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இருப்பு மீள் மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 1,007,691 மீதியாகவும், இறுதியிருப்பாக 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இருப்பு

மீள் மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 1,963,213 இருப்பு மீதியாகவும் கொண்டுவரப்பட்டு அந்த இருப்பு மீதி இரண்டினதும் வேறுபாடான ரூபா 955,522 பெறுமதி நாட்குறிப்பு 20 இன் மூலம் இருப்புக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இருப்பு மீதியை இனங்கண்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 83,754,442 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,690,504 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,848,612 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 42,608,638 தொகையில் 2009 ஆம் ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 3,790,585 தொகை மற்றும் 2010 ஆம் ஆண்டில் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 9,689,694 என்பன தீர்த்துவைக்கப்படாத மீதியாகக் காணப்பட்டன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 702 | 612 | 90 |
| (ii) | வாடகை | 9,961 | 11,036 | (1,075) |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,201 | 1,182 | 19 |
| (iv) | ஏனைய வருமானம் | 47,841 | 30,132 | 17,709 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,725,418 ஆகும்.

### 2.3.3 ஆதன வரி

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 387,848 ஆக இருந்ததுடன் இந்த நிலுவையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 33 - 41 ஆவது விதிகளின் பிரகாரம் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3.4 கடைகளை வாடகைக்கு விடல்

ஹெட்டிபொல நகரில் புதிய வியாபாரத் தொகுதியின் கடைகளுக்கு ஒரே தடவையில் செலுத்தும் பணம் பெறும் முறையில் வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 12 ஆம் இலக்க கடைக்காக இரண்டு வாடகையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 776,000 மற்றும் ரூபா 693,100 தொகையான கூறுவிலைகளில் உரிய காரணம் காண்பிக்கப்படாது ரூபா 693,100 தொகையான இரண்டாவது கூறுவிலை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடும் போது இரண்டாவது கூறுவிலை சமர்ப்பித்த தரப்பினருடன் உடன்படிக்கை கைச்சாத்திடாமல் அந்த வாடகையாளரின் கோரிக்கையின் பேரில் கூடிய கூறுவிலை சமர்ப்பித்த தரப்பினருடன் இரண்டாவது கூறுவிலையான ரூபா 693,100 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) 9 ஆம் இலக்க கடைக்காக முறையே ரூபா 915,000 மற்றும் ரூபா 761,000 தொகைப் படி இரண்டு கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கேள்வி கையளிக்கின்ற போது சபையினால் உரிய காரணங்கள் குறிப்பிடப்படாது ரூபா 761,000 தொகையான குறைந்த கூறுவிலை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே உரிய வாடகை உடன்படிக்கை, கேள்வி சமர்ப்பிக்காத வேறு ஒருவருடன் ரூபா 761,000 தொகையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(iii) 4 ஆம் இலக்க கடைக்காக ரூபா 940,000 இற்கும் ரூபா 1,202,600 இற்குமிடையிலான வீச்சில் 5 கூறுவிலைகள் கிடைத்திருந்ததுடன் கேள்விகளை கையளிக்கின்ற போது சபையினால் உரிய காரணங்கள் குறிப்பிடப்படாது அந்த கூறுவிலைகளில் ஆகக் குறைந்த கூறுவிலையான ரூபா 940,000 தொகையான கூறுவிலை சமர்ப்பித்த வாடகையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

2011 திசெம்பர் மாதத்தின் போது களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) நீர் உத்தேசத் திட்டத்திற்காக பல வருட காலத்திற்கு முன்னர் கிடைத்திருந்த ரூபா 518,000 பெறுமதியான நீர்க் குழாய் உபகரண இருப்புக் காணப்பட்டதுடன் அவற்றை உரிய செயற்பாடுகளில் அல்லது ஏனைய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு அல்லது பொருத்தமான வகையில் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்வேறு அளவுகளையுடைய பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட 80 டயர்கள் அளவில் களஞ்சியத்தின் பின்பக்கத்தில் குவிப்பக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை மீள்நிரப்பி பாவிப்பதற்கோ அல்லது விற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சுயதொழில் செய்வதற்குப் பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்ட 03 துவிச் சக்கரவண்டிகளுக்குரிய கடன்தொகை மீளச் செலுத்தாததனால் மீளப் பெறப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை பொருத்தமானவர்களுக்கு கையளிப்பதற்கோ அல்லது பொருத்தமான வகையில் விற்றுத்தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் பல்வேறு தரங்களிலும் 15 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) சபையின் செயலாளர் பதவி முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் வகுப்பின் பதவியாக இருந்த போதிலும் இரண்டு வருடங்கள் அளவிலான காலம் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் வேலைகளைக் கவனித்து வந்ததுடன் இரண்டு நூலகர் பதவிகளில் ஒரு நூலகர் பதவி நூலக உதவியாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) தொழிலாளர், சாரதி, காவலாளி போன்ற பதவிப் பெயர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 42 ஆக இருந்ததுடன் அதன் கீழ் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 36 பேர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அமைய/நாட்சம்பள அடிப்படையின் கீழ் சபை நிதியத்திலிருந்து சம்பளம் பெறுகின்ற 16 பேர்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் களஞ்சியம் மற்றும் இருப்புகள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிராததுடன் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் விதி 218 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான மெய்மையாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,980,736 ஆகக் காணப்பட்டது.

(இ) நிறுவனத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிருவாகம
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்